



# ஞானச்சாரியார்
# ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக்கள்

## தை மாத வெளியீடு

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த**
**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

**காயந்திரி மந்தரம்**

**பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி**
**இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**அருட்கொடையாக வழங்குகிறார்**

**உள்ளுறை**


1. காயந்திரி மந்தர முன்னுரை
2. பதினெண்சித்தர்கள் படைத்த காயந்திரி மந்தரம்
3. அருளூறு காயந்திரி மந்தரம்


---

***“அனைவரும் ஓதிப் பயனடையட்டும்”***

***“தனிமனிதச் செழுச்சியே இந்துமதம்”***

***“தனிமனித வழிபாட்டு ஈட்டமே கூட்டுவழிபாடு”***

***- குருபாரம்பரியம்***

## காயந்திரி மந்தர முன்னுரை

இந்துமதம் என்றால் என்ன? அது, எப்போது? எங்கு? எவரால்? ஏன் தோற்றுவிக்கப்பட்டது? அதன் குரு யார்? குருகுலம் எது? அதன் மூலக் கோயில் எது? மூது நூல் எது? முதன்மையான வழிபாடு என்ன? தத்துவம் என்ன? சித்தாந்தம் என்ன? அது கூறும் மானுடவாழ்வு விளக்கம் என்ன? வாழ்க்கைப் பயன் என்ன? முற்பிறவி, மறுபிறவி பற்றிய கருத்து என்ன? சொர்க்கம், நரகம், பாவம், புண்ணியம், பிறப்பு, இறப்பு, மண்ணுலக வாழ்வு....... முதலியவை பற்றிக் கூறுவதென்ன? என்ற **வினாக்களுக்கு விடை கூறும் வல்லமையுடையவரே இந்து மதத்தின் தலைவர்**. மேற்கூறிய வினாக்களுக்குச் செயல் விளக்கமாக மந்திரங்கள், பூசாவிதிகள், சடங்குகள், நெறிகள், சம்பிறதாயங்கள், மரபுகள், நம்பிக்கைகள், ஒழுகலாறுகள்..... முதலியவைகளைத் **தெளிவான, அழகான, எளிமையான, பயனுடைய இலக்கியங்களாகத் தரக்கூடிய மொழிதான் இந்துமதத்தின் மூலமொழி**, தாய்மொழி, முதல்மொழி, பூசைமொழி, அருளாட்சி மொழி, மதப்பயிற்சி மொழி, தேவமொழி.... எனும் தகுதியைப் பெற்றிடும்.

இந்த வரையறுக்கப்பட்ட கருத்தின்படிதான் (definition) இந்துமத வரலாறும், விளக்கமும் வழங்கப்படல், விளக்கப்படல் நிகழ வேண்டும். அப்பொழுதுதான், இந்து மதத்துக்குள் உள்பூசல், போட்டி, பொறாமை, சூழ்ச்சி, சண்டை, சச்சரவு, சுரண்டல், ஏமாற்று, தவறான வழிநடத்தல், மடமை, அறியாமை, புரியாமை, மதவிரோதம், மதத்துரோகம், மதமறுப்பு, மதவெறுப்பு, (மதக்காட்டிக் கொடுப்பு) முதலியவைகளை முழுமையாக வெல்ல முடியும்.

**இப்படிச் சிந்திப்பதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்க வளவளர்ச்சிச் சிந்தனையாக இருக்க முடியும்.**

தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் நாத்திகவாதத்தைத் துவக்கி வளர்த்தபோதும்! அவர், ஓர் இந்துமத அழிவுச்சத்தியாகச் செயல்படவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! அவர், பார்ப்பன மறுப்பு! வெறுப்பு! எதிர்ப்பு! என்ற கருத்தில்தான் இந்துமதத் தலைவர்களாகப் பார்ப்பனர் இருப்பதையும், பார்ப்பனர் மொழியான சமசுக்கிருதம் இந்துமத ஆட்சிமொழியாக இருப்பதையும் கண்டித்தார்! பழித்தார்! அவரே, தமிழ்மொழி இந்துமத ஆட்சிமொழியாவதையும், தமிழர் குருக்களாவதையும், அனைவரும் கோயில் ‘கருவறைக்குள்’ சென்று வழிபாடு செய்வதையும் ஆதரித்தார்! வரவேற்றார்! வலியுறுத்திப் போராடினார்.

எனவே, ‘பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்தச் சிங்கம், தமிழினத்தந்தை, பெரியார் ஈ.வெ.ரா. இந்துமதத்தைச் சீர்திருத்தும் ஒரு மாபெரும் வீரச் சீர்திருத்தக்காரராகத்தான் வாழ்ந்தார்.....’ என்ற பேருண்மையை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்துச் செயல்படலே இந்துமத மறுமலர்ச்சிப் பணியை எழுச்சியும், செழுச்சியும், உயர்ச்சியும் உடையதாக்கிடும்.

### திட்டங்கள்:

(1) இந்துமதம், பார்ப்பனர் என்று கூறப்படும் வடஆரியரின் வருகைக்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் பதினெண் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

(2) இந்துமதத்துக்குப் பதினெண் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகை அருட்பட்டத்தார்களும், பதின்மூன்று வகை அருளாளர்களும்..... பிற அருட்சித்தியாளர்களும் உருவாக்கிச் சென்றுள்ள விந்துவழி வாரிசுகளும், கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளுமே குருமார்கள், தலைவர்கள், அருட்தளபதிகள். எனவே பார்ப்பனர் யாரும் இந்துமதத்தின் குருவாகவோ! தலைவராகவோ! தளபதியாகவோ!...... இருக்கவே முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!

(3) பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழ்மொழிதான் இந்து மதத்தின் ஆட்சி மொழி! அருள்மொழி! பூசைமொழி! பத்திமொழி! சத்திமொழி! சித்திமொழி! முத்திமொழி!.... எனவே, சித்தர்கள் ஆரியர்களின் எழுத்தற்ற பேச்சு மொழியைத் தமிழின் அடிப்படையில் உருவாக்கிய சமசுக்கிருத மொழிக்கும் இந்து மதத்துக்கும் தொடர்பே இல்லை.

குறிப்பு: சித்தர்களின் சாபத்தால் செத்துப் போன ஒரு மொழியே சமசுக்கிருத மொழி. இந்த உயிரற்ற மொழியில் கூறப்படும் மந்திரம், சாத்திறம், தோத்திறம், ஆகமம், உபநிடதம், வேதம்..... முதலிய அனைத்துமே பயனற்றவை, பிணத்துக்குச் சமமானவையே.

(4) ஆரியர்களின் வேதமதத்துக்குத் தலைவராக இருக்கும் ஆச்சாரியார்களோ, பீடாதிபதிகளோ! மடாதிபதிகளோ! குருமார்களோ! சன்னிதானங்களோ!..... இந்துமதத்தின் தலைவர்களாகக் கருதப்படவே மாட்டார்கள். இப்படிக் கருதப்பட்டதால்தான் இந்துமதம் நலிந்து, மெலிந்து, தாழ்ச்சியும், வீழ்ச்சியும் அடைந்தது. எனவே, ஆரியர்களோ, ஆரியமொழியோ இந்துமதத்துக்குத் தலைமை தாங்குவதும், வழிகாட்டுவதும் தடுக்கப்பட்டேயாக வேண்டும். இதனையே இ.ம.இ.யின் இரண்டாவது தலைவரான சித்தர் காகபுசுண்டர் தமது முடிவான கருத்தாக அனைத்து இ.ம.இ. சார்புடைய அமைப்புக்களுக்கும், அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறிவிக்கிறேன்.

- ***காக்கா வழியன் பண்ணையாடி***
***ம. பழனிச்சாமி பிள்ளை***

(5) சித்தர் ஏளனம்பட்டியார் “.....ஆரியர்களின் வேதநெறிதான் துறவறத்தைக் கூறுகிறது. ஆனால், இல்லறத்தைத் துறப்பவன், மறப்பவன், மறுப்பவன் பெரிய பாவி. அவன் பூசை செய்யக்கூடாது. அவனைப் பார்ப்பதும், அவனோடு பழகுவதும் பாவம் என்று பதினெண் சித்தர்கள் கூறியுள்ளனர். இந்நிலையில் ஆரியத் துறவிகளை எப்படிப் புனிதர்களாக, புண்ணியவான்களாக, மதத் தலைவர்களாக, குருமார்களாக ஏற்க முடியும்? எனவே, **ஆரியத் துறவிகள்** இந்துமதத்தின் குருமார்களாக, தலைவர்களாக, ஆச்சாரியார்களாக, பீடாதிபதிகளாக, சன்னிதானங்களாகக் கருதப்படவே கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!

தமிழினத்து மடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆச்சாரியார்கள்.... ஆரியரைப் பார்த்தே **துறவியாயினர்**. இது தவறு. திருந்த வேண்டும். இல்லறத்தார்தான் இந்துமதத்தில் குருமார்களாக, ஆச்சாரியார்களாக, தலைவர்களாக, வழிகாட்டிகளாக, அருளாளர்களாக, பீடாதிபதிகளாக, மடாதிபதிகளாக, சன்னிதானங்களாக.... இருக்க வேண்டும்! இருக்க முடியும். இதனைச் செயலாக்கினால்தான் இந்துமதம் வளமிகு வளர்ச்சியும், வலிவும் பொலிவும் பெற்றிடும்......” என்று எழுதிச் சென்றிருப்பதை இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் என்று யாமும் அப்படியே அறிவிக்கிறோம்.

***சித்தர் காகபுசுண்டர்***
***காக்காவழியன் பண்ணையாடி***
***ம.பழனிச்சாமி பிள்ளை***

(6) சித்தர்களில் மண்ணை, பொன்னை, பெண்ணை மறுத்தும் வெறுத்தும் வாழ்பவர் உண்டு. இவர்கள் **‘ஞானசித்தர்’** எனப்படுவர். இவர்கள் ஆக்கப் பூர்வமாக எந்த ஒரு வகையான வழிபாட்டு நிலையத்தையும் உருவாக்க முடியாது. இவர்கள் தங்களுடைய பூசைகளுக்கு மற்றோர் குருக்கள், பூசாறி,.... தேடிட நேரிடும். இவர்கள் தத்துவ விளக்க நாயகர்களாக வாழ்ந்திடுவர். தங்களுடைய வாரிசுகளாக அருளுலகில் எவரையும் உருவாக்க முடியாதவர்களாகி விடுவார்கள்.

குறிப்பு:

(அ) பெண்ணை வெறுப்பதும், மறுப்பதும், இறைச்சியுணவை மறுப்பதும், வெறுப்பதும் ஒன்றே. எனவே, இவர்கள் பலியும், படையலும் இல்லாமலே பூசை செய்வர்.

(ஆ) இப்படிப் பட்டவர்கள் மோனத்தால் ஞானசித்தி பெற்றுத் தத்துவ வளத்துக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடுவார்கள். ஆனால், பதினெண் சித்தர்கள் படைத்த இந்துமதத்துக்குத் தலைவர்களாகவோ, வழிகாட்டிகளாகவோ செயல்பட இயலாது. இவர்கள், பதினெண் சித்தர்கள் படைத்த கருவறைகளுக்குள் சென்று வழிபட இயலாதவர்கள்.

(7) காயந்திரி மந்தரம் பலியோ, படையலோ இல்லாமல் கூட ஓதிப் பூசையினை முடிக்கும் சிறப்பினை உடையது. எனவே, இதனை ஞானசித்தர்கள் அன்றுடம் ஆறுகாலம் ஓதியே அனைத்துப் பூசைகளையும் நிறைவு செய்து கொள்கின்றனர்.

(8) காயந்திரி மந்தரம் பெரியவர், சிறியவர், ஆண், பெண்...... என்ற வேறுபாடு இல்லாமல்

அனைவரும் ஓதிப் **பதினெட்டாண்டுகளில் மனித வாழ்வுக்குத் தேவையான சத்திகளைப் போதுமான அளவு பெற்றுக் கொள்ள உதவுகிறது.**

குறிப்பு:

(அ) காயந்திரி மந்தரத்தைப் பதினெட்டாண்டுகளுக்குப் பிறகும் முறையாக ஓதும் போதுதான் மானுடவாழ்வு கடந்த மிகப்பெரிய சத்திகள் சித்தியாகின்றன.

(ஆ) பதினெட்டாண்டுகள் காயந்திரி மந்தரம் ஓதிய பிறகுதான்

காயந்திரி மாந்தரம்
காயந்திரி மாந்தரீகம்
காயந்திரி மந்திரம்
காயந்திரி மந்திறம்

எனும் நான்கைக் குருவழியாக முறையாக அவரவர் பக்குவத்துக்கும், தேவைக்கும், ஆர்வத்துக்கும் ஏற்ப ஒன்றன்பின் ஒன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

(இ) பெரும்பாலும் 18 ஆண்டுகள் காயந்திரி மந்தரம் சொன்னவர்கள் அகம்பாவம், ஆணவம், பேராசை, சொந்தபந்தப் பாசம்.... முதலியவைகளையெல்லாம் வென்று இல்லறத் துறவியாக 'அந்தணர்' ஆகிடுகின்றனர். எனவே, இவர்கள் குருக்களாக, ஆச்சாரியாராக, ஆதீனமாக, சன்னிதானமாக, மடாதிபதியாக, பீடாதிபதியாகச் செயல்படலாம். இவர்கள் தொடர்ந்து **ஆண்பெண் இன்பம் துய்த்துத்தான் வாழவேண்டும்** என்பதுதான் இந்துமதம்.

(9) காயந்திரி மந்தரத்தைச் சொல்லுகின்ற பெண் தன் மனதில் எந்தக் கடவுளை நினைக்கிறாளோ அந்தக் கடவுளாகவே மாறிவிடுகிறாள்.

***கடவுள்*** - பொதுச்சொல். 48 வகை வழிபடு நிலையினரையும் குறிக்கும். அதனால், பதினெண் சித்தர்கள் காயந்திரி மந்தரம் ஓதிக் கொண்டிருக்கும் பெண்ணைப் பூசை செய்வது, வணங்குவது, கும்பிடுவது, வழிபடுவது.... மிகச் சிறந்த பயன்களைக் குறுகிய கால அளவில் விரைந்து தரும் என்று வலியுறுத்துகின்றனர்.

குறிப்பு:

(அ) குருவழி ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளை முழுமையாக இட்டும் தொட்டும் சுட்டியும் வழங்கப் பெற்றுச் சித்தி பெற்றவர்கள், எந்தப் பரிகாரத்தையும் குருவாணை பெற்றுப் பாதிப்புள்ளவர்களை ஒரு மண்டலம் (48 நாட்கள்) காயந்திரி மந்தரம் ஓதச் சொல்லி மேற்படிப் பூசைகளில் எதைச் செய்தாலும் முழுமையான நலம் விளையும்.

(ஆ) ஆரியர்கள் பெண்கள் மந்தரம் சொல்லுவதைத் தடுத்துள்ளார்கள். ஆனால், சித்தர்களின் இந்துமதம் பெண்களை எல்லாப் பூசைகளிலும் கலந்து கொள்ள அனுமதிப்பதால் அதைத் தடை செய்யவில்லை அவர்கள். இருப்பினும் விதவை, தீட்டு, மலடி.... என்று பெண்களில் ஒரு பகுதியினரைப் பூசைகளில் பங்கு பெறாமல் தடுக்கும் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை உருவாக்கியுள்ளனர் ஆரியர். இதுவே, இந்துமதத்துக்குக் கணிசமான அளவு நலிவுகளையும் சிக்கல்களையும் வழங்கியுள்ளது.

எனவே காயந்திரி மந்தரத்தை இனிவரும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளாவது தாராளமாக எல்லோரும் தெரிந்து, அறிந்து, பயின்று, பயன்படுத்தி, அநுபவித்துப் புரிந்து நன்மையடையும்படிச் செய்ய வேண்டும். அதுதான், இந்துமதத்தை மறுமலர்ச்சி பெறச்செய்யும்; பதினெண் சித்தர்கள் படைத்த இந்து மதமே உலக மதங்களனைத்துக்கும் மூலமதம், தாய்மதம்,... என்ற பேருண்மையை உலகம் உணரச் செய்யும்; உலக மதங்களை ஒன்றிணைக்கும்; உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்கும். தனிமனிதர்களைப் பக்குவப்படுத்திக் குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு.... முதலிய அனைத்தையும் வளப்படுத்தி, வலிமைப்படுத்திப் பொலிவு பெறச் செய்யும் ஆற்றல் 'காயந்திரி மந்தரத்துக்கே' உண்டு.

என்றால் காயந்திரி மந்தரத்தை உலகுக்கு வழங்க முடியவில்லையே என்று வருந்துகிறேன். இருந்தாலும் இ.ம.இ., அ.வி.தி., க.வ.க., அ.ஆ.க.,.... முதலிய பல அமைப்புக்களைக் காயந்திரி மந்தரம் பயிர் செய்யப்படப் போகும் நிலத்துக்கு வேலியாக அமைக்கிறேன். ஏனெனில், வேலியில்லாப் பயிராக இந்துமதம் இருந்ததால்தான் போலியானவற்றால் இந்துமதம் நலிந்தது, செயல் தடுமாறித் தோல்வி பெற்றிட நேரிட்டது......

இனியாவது தமிழர் உலகுக்கு இந்துமதத்தை அமுதமாக, காயகல்பமாக, கற்பகத் தருவாக வழங்கட்டும்.

***- கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை***

யாம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி..... என்று அறுபத்துநான்கு நிலைகளையும் பாரம்பரிய உரிமையாகப் பெற்று இந்துமதம் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். எமக்குரிய பதினெட்டாண்டு காலப் பயிற்சிகளையும், பதினெட்டாண்டு கால முயற்சிகளையும் முறையாக நிறைவேற்றி முடித்த கால எல்லைக்குள்ளேயே அரசயோகம் செய்து முடித்தோம். உலக அருளாளர்களும், கருக்களும், குருக்களும், தருக்களும், திருக்களும், தாத்தாக்களும், ஆத்தாக்களும்,.... பலபடப் புகழ்ந்து விதந்து பேசும் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற நிலையையும் சித்தி செய்தோம். இவற்றின் பிறகும் யாம் இலைமறை காயாகவே இருந்து செயல்பட்டுக் 'குருகுலங்கள்', 'பத்திப் பாட்டைகள்', 'சத்திச் சாலைகள்', 'சித்திச் சோலைகள்', 'அருட்கோட்டங்கள்', 'தவச்சாலைகள்', 'வேள்விப் பள்ளிகள்', 'யாகசாலைகள்'.... அமைத்து அருளுலகப் பயிற்சி வழங்கி நாற்பத்தெட்டு வகையான அருளாளர்களையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டோம். இப்படி உருவானவர்கள் மூலம் நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களையும் புத்துயிர்ப்புச் செய்யும் பணிகளைத் துவக்கினோம். "வாருங்கள் மானுடரே! உங்களைக் கடவுளாக்குகிறோம்!" என்று அழைப்புக் கொடுத்தே அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்கி அருளை அநுபவப் பொருளாக வழங்க ஆரம்பித்தோம். கி.பி. 1772 இல் எம் தாய்வழித் தாத்தா கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை தோற்றுவித்த இ.ம.இ.யை (இந்து மறுமலர்ச்சி இயக்கம்) அரசுப்பதிவுக்குள்ளாக்கி நாடெங்கும் கிளைகளைத் தோற்றுவித்து இந்துமத வளவளர்ச்சிப் பணியை விரிவு படுத்தினோம். இதற்குத் துணையாக ஏளனம்பட்டியார் உருவாக்கிய க.வ.க. (கடவுளை வழிபடுவோர் கழகம்), அ.ஆ.க. (அருளுலக ஆர்வலர் கழகம்),.... முதலியவைகளையும் நாடெங்கும் உருவாக்கினோம். ஒளிவுமறைவோ! சாதிமத வரையறையோ! ஏழைபணக்காரர் என்ற வேறுபாடோ இல்லாமல் 'பிறணவம்', 'பிறுணு யாமம் (பிறணவ யாமம்)', 'அருட்சினை மந்திறம்', 'கட்டு மந்திரம்', 'யாக மந்திரம்', .... முதலியவைகளை வழங்கினோம். இவற்றிற்கெல்லாம் மேலாக, உலகுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கிட எமது சாதனைகளின் மூலம் பலருக்கு 'ஞானக்காட்சி', 'அருட்கணிப்பு', 'அருள்வாக்கு', 'பரிகாரம் செய்யும் அருளாற்றல்', 'தவசித்தி',...... முதலிய அருட்செல்வங்களை வழங்கி அருளாளர்களாகச் செயல்படச் செய்தோம். இத்திட்டத்தில் சில தனிமனிதர்களின் தவறுகளால் பழியும், இழப்பும், தேக்கமும், குறையும்.... வந்தன. இருந்தாலும், அவற்றை உடனுக்குடன் திருத்திச் செயல்பட்டோம்.

இவற்றையெல்லாம் கணக்கிட்ட உலக அருளாளர்கள் 'இந்துமதத்தால்தான் உலக ஒற்றுமை, சமத்துவம், பொதுவுடமை, அமைதி,..... முதலியவை உருவாக்க முடியும்' என்ற பேருண்மையை உணர்ந்தனர். எனவே, எம்மை 'இந்துமதத் தந்தை, 'குருமகா சன்னிதானம்', 'ஞாலகுரு சித்தர் கருவூரர்' என்று பாரம்பரிய அருட்பட்டங்களின் சுருக்க அருட்பட்டங்களால் ஏற்றுப் போற்றினர். அத்துடன் உலகம் முழுவதுமுள்ள அருளாளர்கள் எமக்கு எல்லாவித உதவிகளையும், பாதுகாப்புக்களையும் அருளாட்சி முயற்சித் துணைகளையும் வழங்கலாயினர்.

இவற்றால் துணிவு பெற்ற யாம், பருவகாலத்தே பயிர் செய்தல் வேண்டுமென உணர்ந்து அருட்பயிர் விளைவிக்கும் பணியில் முழுமையாக எம்மையும், எம்மைச் சார்ந்த பல நூறாயிரக்கணக்கான அருளாளர்களையும் பல்லாயிரக்கணக்கான அமைப்புக்களையும் ஈடுபடுத்தியுள்ளோம். **இப்பணியின் முதல் கட்டமாகக் காயந்திரி மந்தரத்தைப் பதினெண் சித்தர்கள் முதன்முதல் தமிழ்மொழியில் எப்படி வெளியிட்டனரோ! அப்படியே இப்போது வெளியிடுகிறோம்.** இதன் முன்னுரையாக இ.ம.இ.யின் முதல் தலைவரான கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் எழுதியவைகளிலிருந்து சில வாசகங்களையும், இ.ம.இ.யின் இரண்டாவது தலைவரான எம் தந்தை சித்தர் காகபுசுண்டர் காக்காவழியன் பண்ணையாடி ம. பழனிச்சாமி பிள்ளை எழுதியவைகளிலிருந்து சில வாசகங்களையும் தேர்ந்தெடுத்துத் தொகுத்துக்

கொடுத்துள்ளோம். இப்படி, எமது முன்னோர்களின் வாசகங்களைத் தொகுத்து இந்தக் காயந்திரி மந்தர வெளியீட்டுக்கு முன்னுரை தயாரிப்பதையே எமது கடமையாகக் கருதுகிறோம்.

தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோண நிலம்தான் இந்துமதத் தத்துவ விதைப்பண்ணை, நாற்றுப்பண்ணை. இப் பேருண்மையை உணர்ந்து தமிழர்கள் இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட முன்வர வேண்டும் என்று வேண்டுகிறோம் யாம். இந்துமதம் பயிராகும் நிலமே இந்தியா என்பதை இந்தியர்கள் உணரலே இந்திய ஒற்றுமையை உருவாக்கும்.

**எம் கடன் பணி செய்து கிடப்பதே!**

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!**

**அன்பே சிவம்!**

அன்பு
***இந்துமதத் தந்தை***
***குருமகா சன்னிதானம்***
***ஞாலகுரு சித்தர் கருவூரார்***

---

**"... நண்பா! மனித வாழ்க்கையில் எந்த நேரத்திலும் மரணம் வரலாம். ஒவ்வொரு மனிதனும் அதை நிம்மதியோடும், துணிவோடும் வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு மனிதனும் தான் எடுத்த மனிதப் பிறப்பு தன்னால் வீணடிக்கப் படவில்லை என்ற தன்னம்பிக்கையோடு வாழ்ந்திடல் வேண்டும். எனவே, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஒவ்வொரு நொடி வாழ்வையும் பிறர் நலம் பேணுவதாக அமைத்துக் கொண்டு வாழ வேண்டும். மனிதனாகப் பிறந்தது மண், பெண், பொன் முதலியவைகளை அநுபவிப்பதற் காகத்தான் என்று தவறாகப் பலரால் கருதப்பட்டு வீணாக்கப் படுகின்றது. அதனால்தான், இவ்வுலகில், எண்ணற்ற திருவருட் செல்வர்கள் தோன்றியும் மனித இனத்தைச் செம்மைப் படுத்தவே முடியவில்லை. ..."**

***- குருதேவர் எழுதிய 'நனவு' என்ற அஞ்சல் கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்டது.***

# பதினெண்சித்தர்கள் படைத்த காயந்திரி மந்தரம்

## (சமசுகிருதத்தில் காயத்ரீ மந்த்ரம்)

தமிழில் அக்கலையில்லையே! இக்கலை-யில்லையே! என்று கூறுபவர்க்குப் பதில் கூறும் வண்ணமாகத்தான் இ.ம.இ. மத மறுமலர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது. தமிழில் உள்ள எண்ணற்ற வகையான மந்திறங்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் முதல் கட்டமாக இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் வாழ்த்துதலுடன் கோப்புகளிலிருந்து முதன் முதலாகக் 'காயந்திரி மந்தரம்' என்ற தொகுப்பை விரிவான வரலாற்று விளக்கத்தோடு வெளியிடுகின்றோம். 'காயத்திரி மந்தரம்' என்று சமசுக்கிருதத்தில் கூறப்பட்டு வருவதைத் தவிர்த்து தமிழில் உள்ள இம்மந்தரத்தை அனைவரும் நாடு, மொழி, இன, மத.... வேறுபாடின்றி உடனடியாகப் பயன்படுத்தித் தங்களை அமைதியான, அறிவான, இளமையான, இனிமையான.... வாழ்க்கைக்கு உட்படுத்திக் கொண்டு சிறக்கும்படி வேண்டுகிறோம். தமிழில் உள்ள மந்திறங்கள்தான் குறிப்பிட்ட ஒரு இனத்துக்கு உரியன என்றில்லாமல் அனைவரும் பயன்படுத்தக் கூடிய விதத்தில் பதினெண் சித்தர்கள் படைத்துள்ளனர்.

**"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"**

இதுவே காயந்திரி மந்தரம் (காயம் = உடல், திரி = திரியாமல், மாருமல்) ஆகும்.

ஆரியர்களுக்காகச் சித்தர்கள் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு புதிய ஒரு மொழியைச் 'சமசுக்கிருதம்' (சமம் = தமிழுக்குச் சமமாக; கிருதம் = செய்யப்பட்டது) என்ற பெயரில் படைத்தனர். ஏற்கனவே ஆரியர்கள் பேச்சு வழக்கில் வைத்திருந்த சொற்களையும், உச்சரிப்பு முறைகளையும் அப்படியே ஏற்றுப் போற்றிப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய மொழி பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழ்

மொழியிலிருந்துதான் பிறந்தது என்பதற்காகத்தான் 'சமம்' என்ற தமிழ்ச் சொல்லையும் 'கிருதம்' என்ற ஆரியரின் பேச்சு வழக்குச் சொல்லையும் இணைத்துச் 'சமசுக்கிருதம்' என்ற பெயர் உருவாக்கப்பட்டது.

ஆரியர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்ற போதும் தங்களின் மொழி எழுத்துக்களை இந்தியாவைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி வைத்துக் கொண்டனர். ஆனால், இந்தியாவின் மூலமொழியாகவும், இந்துமதத்தின் ஆட்சிமொழியாகவும், சித்தர்களின் ஞானங்களையும், விஞ்ஞானங்களையும், அறிவியல்களையும் விளக்கிடும் கலைச் சொற்களை உடைய மொழியாகவும் இருக்கின்ற தமிழ்மொழியினின்று வேறுபட்ட எழுத்தோ, ஒலிநயமோ, இலக்கிய இலக்கணமோ.... உடைய மொழியாக ஆரியமொழி வடிவப்பட்டால் ஆரியர் என்றைக்குமே இந்தியர்களோடு (தமிழர்களோடு) கலந்து வாழ முடியாது. எனவேதான், சித்தர்களின் மொழியறிவு, நூலறிவு, தத்துவ அறிவு, மதஞானம், பொருள்ஞானம், கலைஞானம்.... முதலிய அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொண்ட ஒரு மொழியாக ஆரியர்களின் பேச்சுமொழி எழுத்துடைய மொழியாக்கும் பொறுப்பு சித்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதியவைகளையும், புதுமைகளையும் வரவேற்கும் புரட்சியாளர்களான பதினெண் சித்தர்கள் பெரிதும் முயன்று இந்துமதத்துக்குத் துணையாகப் பயன்படக் கூடிய ஒரு புதிய மொழியை உருவாக்க வேண்டும் என்ற பேரார்வத்தில் சமசுக்கிருதத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர். ஒரு குறிப்பிட்ட அளவு சமசுக்கிருத மொழி எழுத்தும் இலக்கியமும் பெற்றவுடன் ஆரியர்கள் சித்தர்களின் சமசுக்கிருத மொழி உருவாக்கும் பணியில் மிகுதியாகத் தலையிட்டனர்.

தமிழில் இருந்து வரும் இலக்கியங்களை முழுமையாக மொழிபெயர்க்க விடாமல் சமசுக்கிருதத்தில் ஆரியக் கற்பனைகள், கதைகள், இதிகாசங்கள், பூசைக்குரிய வாசகங்கள், ஒலிகள், மதநூல்களின் பெயர்கள், கடவுள்களின் வரலாறுகள்.... முதலியவைகளையெல்லாம் அப்படியே புதிய மொழிபெயர்ப்புக்களில் புகுத்தி மாயமான, பயனற்ற கற்பனையான, ஏமாற்றான, தவறான, சூழ்ச்சியான,..... இலக்கியங்களைப் படைத்தனர். இதனால், அண்டபேரண்டமாளும் தமிழ்மொழியின் மெய்ஞ்ஞான, புறஞான, விஞ்ஞான, பொருள்ஞான, அருள்ஞான இலக்கிய இலக்கணங்கள் உலக மக்களுக்குக் கலப்படமின்றி, சிதைவின்றி, குறைவின்றி, மறைவின்றிக் கிடைக்க முடியாமல் போகும் ஆபத்து விளைந்தது.

அதனால், சித்தர்கள் தங்களுடைய ஒத்துழைப்பையும், முயற்சியையும் ஆரியப் பண்டிதர்களுக்குத் தர மறுத்து விட்டார்கள். அதனால்தான், தமிழில் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் என்று பதினாறு இருந்தும்; தமிழில் உள்ள நான்கு வேதங்களின் பெயர்களைத் தழுவியே 1. இருடிவேதத்தை இருக்கு வேதம் 'ரிக்வேதம்' என்றும், 2. அசுர வேதத்தை யசுர்வேதம் 'யஜீர்வேதம்' என்றும், 3. யாமவேதத்தை (இரவில் கூறும் சாமவேதம்) 'ஸாமவேதம்' என்றும், 4. அதர்வான வேதத்தை 'அதர்வணவேதம்' என்றும் மாற்றினார்கள்.

ஆனால், இந்த சமசுக்கிருத வேதங்களால் நடக்கும் ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி, தவம், பூசை..... முதலிய அனைத்துமே கோடியில் ஒரு பங்கு கூட தமிழ் வேதங்களால் செய்யப்படுவனவற்றால் கிடைக்கும் பயன் போலத் தர முடியாதவை. இதனால்தான், சித்தர்கள் கட்டிய 48 வகையான வழிபாட்டு நிலையங்களும் அருள்நலம் குன்றிப் பொலிவிழந்து விட்டன. குறிப்பாகக் குடமுழுக்கு விழாக்கள், கருவறைப் புத்துயிர்ப்புக்கள், எழுந்தருளிப் புத்துயிர்ப்புக்கள், சக்கரப் பூசைகள், ஏந்தரப் பூசைகள்.... எல்லாம் சித்தர்களின் மரபுப்படி 'இலைக் குலுங்கா நடுச் சாமத்தில்' (நடுநிசியே உயிர்ப்புப் பூசைக்குரியது - குருவாக்கு) 'அனைத்தும் உறங்கும் நள்ளிரவில்' 'அருவ, அருவுருவ ஆட்சிக்குரிய நடு யாமத்தில்தான்' செய்யப்பட வேண்டும் என்ற சித்தர் நெறி, சட்டம், ஒழுங்கு, மரபு, பூசாவிதி, படி, கட்டளை, ஆணை, அருளுரை, அறிவுரை..... முதலியவைகளை மீறி ஆரியர்கள் செயல்பட்டே இந்துமதத்தின் பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கையும் பகற்கனவாக, மாயமாக ஆக்கி விட்டார்கள். இதனால்தான் 'கடவுளைக் கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை' என்று தவறான பழமொழி பிறந்தது. எல்லோருமே இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர்,..... எனும் நாற்பத்தெட்டு வகையினரையும் காணலாம், யார் விரும்பினாலும் மேற்கூறிய 48

நிலைகளில் யாராகவும் மாறலாம்.... என்ற சித்தர் நெறியே மக்களுக்குத் தெரியாத ஒன்றாகிவிட்டது.

இதேபோல் தமிழில் உள்ள மூன்று நேமங்கள், மூன்று நியமங்கள், மூன்று நிடதங்கள், மூன்று நிட்டைகள் என்ற பன்னிரண்டில் சித்தர்கள் 'நிடதம்', 'இணை நிடதம்', 'துணை நிடதம்' என்ற மூன்றில் 'துணைநிடதம்' என்பதை மட்டும் சமசுக்கிருதத்தில் உபநிடதம் என்று 108 கருத்துக்களை மொழி பெயர்த்த அளவிலேயே ஆரியருடன் தகராறு ஏற்பட்டுச் சமசுக்கிருதத்தை உருவாக்கும் பணி நிறுத்தப்பட்டது. வரலாற்றின் படி தமிழ்மொழியிலிருந்து சமசுக்கிருதத்திற்கு மொழி பெயர்க்கும் பணி இந்த 108வது உபநிடதம் மொழிபெயர்க்கப்படும் போதுதான் சித்தர்களுக்கும் ஆரியர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இத்துடன் இந்த 'உபநிடதம்' மொழி பெயர்க்கும் பணி நிறுத்தப்பட்டு விட்டது. இதனாலேயே உபநிடதம் இன்றும் முழுமைபெறாமல் அரைகுறையாகவே உள்ளது என்பது தெளிவான உண்மை. தமிழிலிள்ள சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள் சமசுக்கிருதத்தில் 'சூக்தங்கள்' என்ற பெயரில் மொழியாக்கம் செய்ய ஆரம்பித்த அளவிலேயே நிறுத்தப்பட்டு விட்டன. இதேபோல், தமிழிலுள்ள சுருதிகள் 'ஸ்மிருதிகள்' என்று சமசுக்கிருதத்தில் மொழியாக்கம் செய்ய ஆரம்பித்த அளவிலேயே நிறுத்தப்பட்டு விட்டன.

இப்பணிகளின் வரலாறு போலத்தான், காயந்திரி மந்தரம், காயந்திரி மாந்தரம், காயந்திரி மாந்தரீகம், காயந்திரி மந்திரம், காயந்திரி மந்திறம் எனும் ஐந்தில் காயந்திரி மந்தரம் என்பது மட்டும் சித்தர்களால் ஆரியர்களின் மிகப் பெரிய வேண்டுகோளுக்கிணங்கிக் **காயத்ரீ மஹாமந்த்ரம்** (= காயந்திரி மகா மந்தரம்) என்ற பெயரில் சமசுக்கிருதத்தில் உருமாற்றித் (ந் -> த், த -> த் என்ற இரண்டு எழுத்து மாற்றங்கள்) தரப்பட்டது.

மற்றபடி வாசகத்தின் பொருளை சமசுக்கிருதத்தில் விரிவாக எழுத முற்பட்ட சித்தர்களை ஆரியர்கள் தடுத்து; "......கருத்து முக்கியமல்ல; ஒலிகள்தான் முக்கியம். தமிழில் காயந்திரி மந்தரம் சொல்லப்படுவது போலவே சமசுக்கிருதத்திலும் சொல்ல வேண்டும். மந்திர ஒலிகள் ஓதும்போது தமிழைப் போலவே இருக்க வேண்டும்......" என்று கூறிப் பிடிவாதம் பிடித்தனர். ஆனால், சித்தர்களோ, "அது மக்களை ஏமாற்றுவதாகிடும், ஒரு பயனும் பொருளற்ற அருள்வாசகத்தால் (=மந்திரத்தால்) ஏற்படாது....." என்று கூறினர். கருத்து மாறுபாடு வலுப்படவே ஆரியர்கள் தாங்களாகவே தங்கள் விருப்பம் போல் **காயத்திரி மந்திரம்** என்று ஒலியைக் குறிக்கும் பொருளற்ற சொற்களால் உருவான ஒரு பூசை மந்திரத்தை உருவாக்கி அதனை ஆரியர்கள் ஓதுவதன் மூலம் தமிழர்கள் தங்களிடமிருந்த **காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம்.... என்பவைகள் ஆரியர்களிடமிருந்து வந்தவையென்றும், ஆரியர்கள் சமசுக்கிருதத்தில் ஓதுவதுபோல் ஓதினால்தான் பயனென்றும் கருதித் தங்களுடைய ஐந்தையும் விட்டு ஆரியருடைய காயத்ரீ மந்த்ரத்தையே ஓத ஆரம்பித்து நாளடைவில் அதனால் பயன் தெரியாமையால் அதனையும் ஓதாது விட்டு விட்டனர். இதுதான் சமசுக்கிருதத்தால் தமிழுக்கும் தமிழருக்கும் இந்து மதத்துக்கும் ஏற்பட்ட பேரழிவு, பெருங்கேடு.** இதனையுணர்ந்துதான்,

1. காலை, மாலை காயந்திரி மந்தரம் (காலை = சூரியன் தோன்றி ஒரு சாமம் 6 - $8^1/_2$)

மாலை = சூரியன் மறைய ஒரு சாமம் $4^1/_2$ - 6)

2. உருமவேளை = நடுப்பகல் = உச்சிவேளைப் பூசையில் (பகல் 11 - $1^1/_2$) காயந்திரி மாந்தரம்

3. நள்ளிரவுப் பூசையில் (நடுயாமம், நடுச்சாமம், இலைக் குலுங்கா நடுநிசியிரவு 11-$1^1/_2$) காயந்திரி மாந்தரீகம்

4. பகலில் எப்போது பூசை செய்தாலும் காயந்திரி மந்திறம் (காலை, உருமம் தவிர)

5. இரவில் எப்போது பூசை செய்தாலும் காயந்திரி மந்திரம் (நள்ளிரவு தவிர)

பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற மரபைப் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் ஏற்படுத்தினார்.

சித்தர்கள் ஆரியர்களுக்குக் 'காயந்திரி மந்தரம்' சொல்லிக் கொடுத்ததால்தான் அவர்கள் காயந்திரி மந்தரம் போன்ற ஒலி அமைப்புடைய 'காயத்ரீ மஹாமந்த்ரம்' என்ற போலி மந்திரத்தைச் சமசுக்கிருதத்தில் உண்டாக்கினர். அதனால், மற்ற நான்கையும் நேரடியாகக் குருவழி வாரிசுகளுக்கும், விந்து வழி வாரிசுகளுக்கும் குறைந்தது

பதினெட்டாண்டுகளுக்கு மேலும் அருளுலகப் பயிற்சிகளைப் பெற்றுக் குருவின் நம்பிக்கையும் பெற்றிட்டால்தான் கற்பிக்கலாம் என்ற கடுமையான சட்டத்தை ஏற்படுத்தினர். இந்த நான்கும், இன்றைக்குப் பெரும்பாலும் காடுகளிலும், மலைகளிலும், தீவுகளிலும்.... தொடர்ந்து கடுந்தவம் புரிபவர்களிடமே வாழுகின்றன. எனவேதான், ‘காயந்திரி நான்கையும் கற்கக் காடு, மலை, தீவு, வனுந்தரமெல்லாம் அலைந்தாலும் வருத்தும் ஊழும் விதியும் இன்றிக் கற்க இயலாது - குருவாக்கு, குருவாசகம்’ என்ற வாசகம் பிறந்தது..... என்று பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூராரின் குருபாரம்பரிய வாசகம் குறிக்கிறது.

அதாவது, ஆரியர்கள் ஒன்பதாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் வைகையாற்றங்கரைக் கருவூராருக்குப் பிறகே இந்தியாவுக்கு வந்தனர்; அதன் பிறகே, சமசுக்கிருத மொழி உருவாக்கப்பட்டது என்ற செய்திகள் இதனால் தெரிகின்றன. மேலும், ஆரியர்கள், தமிழிலிருந்து பிறக்கப்பட்ட சமசுக்கிருத மொழிதான் தமிழுக்கும் முந்தியது என்று பொய் கூற ஆரம்பித்ததால், இந்துமத வரலாறு, தமிழின அரசியல் வரலாறு, தமிழின் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, இந்துமதத் தத்துவங்கள், செயல் முறைகள்.... முதலிய அனைத்திலும் கலக்கம், குழப்பம், ஐயம், சந்தேகம், கற்பனை, பொய், காட்டுமிராண்டித் தனமான மடமை, கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள், அறிவுக்குப் புறம்பான நம்பிக்கைகள், சுரண்டல் முறைகள், முதலாளிகள் ஆதிக்கப் பிடிப்புக்கள், வறுமையை நியாயப்படுத்துதல், அடிமையுணர்வை உரம்போட்டு வளர்த்தல், முழுக்க முழுக்க கடவுள் ஒன்றே என்ற வறட்சி வாதம், வழிபாடுகளில் பலி மறுக்கப்படல், இறைச்சி, மீன், முட்டை.... முதலியவை படையல் பொருள்களாக இருப்பதைத் தவிர்த்தல், பெண்ணையும், பெண்ணின்பத்தையும் மறுத்தல், வெறுத்தல், பழித்தல், இழித்தல்.... எனும் ஆரியக் கருத்துக்களை வளர்த்தல், உருவ வழிபாட்டை மறுத்தல், விண்ணவர், மண்ணவர், அண்டத்தவர், பேரண்டத்தவர், அண்டபேரண்டத்துக்குரிய பிண்டத்தவர்.... என்பவரே வழிபடுநிலை பெறும் ஈசுவரர்கள், எல்லாக்கள்(அல்லா), ஆத்தாக்கள் (தாய்கள்), தாத்தாக்கள், அப்பன்கள் (தந்தைகள்), ஆயாக்கள், இறைகள், கடவுள்கள், தெய்வங்கள், ஆண்டவர்கள், தேவர்கள் எனப்படுகின்றனர் என்ற பேருண்மையை உணரமுடியாமல் செய்தல் என்பன போன்ற எண்ணற்ற கேடுகள் இந்துமதத்துக்கு வந்து விட்டன. எனவேதான், **பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியும், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியும் சமசுக்கிருதத்தை எதிர்த்துக் கடுமையாகப் போராடியிருக்கிறார்கள்**.

ஆனால், தமிழர்கள் இன ஒற்றுமையும், பற்றுணர்வும், மான உணர்வும் இல்லாதவர்களாக மாற்றப்பட்டு விட்டதால் தமிழ் மொழிப்பாசமோ, பற்றோ, ஈடுபாடோ, விருப்போ... இல்லாமல் தமிழினத்துக்கும் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் விரோதிகளாக இருப்பவர்களையே நம்பி ஆதரித்துப் போற்றி மெலிந்து நலிந்து இழிவடைந்திட்டனர். இன்னும் சொல்லப் போனால், தமிழர்களில்தான் தமிழினத் துரோகிகளும், தமிழ்மொழி விரோதிகளும், தமிழ்நாட்டுப் பகைவர்களும் அதிகமாகத் தோன்றுகிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமேயானால், இந்துமதத்தின் மறுமலர்ச்சி ஒன்றுதான் வழி! தமிழர்களுடையதே இந்துமதம்! ஆரிய வருகைக்கு முன்பே இந்தியாவில் இருந்ததுதான் இந்துமதம்! இளமுறியாக் கண்டத்தில் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பதினெண் சித்தர்களால் தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியில் இம்மண்ணுலக ஈசர்களான மணீசர்களுக்கு வழங்கப்பட்டதுதான் இந்துமதம்! ‘இந்து’ என்ற அழகான தமிழ்ச் சொல்லுக்கு ஆதியிலேயே நாற்பத்தெட்டுப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன! இந்துமதத்தவர் வாழும் நாட்டின் பெயராகத்தான் ‘இந்தியா’ என்ற சொல் பிறந்தது. இளமுறியாக் கண்டத்தில் இருந்த 1. பஃறுளி 2. குமரி 3. இந்து 4. கங்கை 5. யமுனை 6. பிறம்மா 7. சிவா 8. மாயோன் 9. இந்திரன் 10. தேவேந்திரன் 11. எமன் 12. முருகு 13. எல்லா 14. இறை 15. கடவுள் 16. தெய்வம் 17. ஆண்டவர் 18. தேவர் ..... எனும் பதினெட்டு ஆறுகளும் புகழ் பெற்றவை, புனிதமானவை. இளமுறியாக் கண்டம் கடலுக்குள் மறைந்த பிறகு தோன்றிய இன்றைய வட இந்தியாவில் தோன்றிய ஆறுகளில் சிலவற்றிற்கு இளமுறியாக் கண்டத்து ஆறுகளின் பெயர்களே வைக்கப் பட்டன. அதன்படி, ‘இந்து’ என்று பெயரிடப்பட்ட ஆறுதான் காலப் போக்கில் சிந்து என்று மாறிற்று. இவற்றையெல்லாம் மீண்டும்

தமிழர்கள் உணர்ந்தால்தான் இந்துமதம் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், செழுச்சிமிகு ஆட்சியும் பெற்றிட முடியும். இதற்காகத் தமிழர்களே அடிப்படையாகக் கொண்ட உலக வரலாறு மூன்று பெரும் பிரிவுகளாக எழுதப்பட்டன. 1. குருபாரம்பரியம் (இந்துமத வரலாறு = உலகமத வரலாறு (Religious History of the World) 2. அரச பாரம்பரியம் (உலக அரசியல் வரலாறு (The Political History of the World) 3. இலக்கிய பாரம்பரியம் (The History of the First Language of the mankind, the Tamil and the History of the Tamil Literature) எழுதப்பட்டன. இவை, தொடர்ந்து எழுதப்படும் மரபும் தோற்றுவிக்கப் பட்டு இடையிடையே நின்றிட்டன. இதற்கும் காரணம், தமிழர்களின் இனப்பற்றின்மை, மொழிப்பற்றின்மை, நாட்டுப்பற்றின்மை, வரலாற்றறிவு இன்மை.... முதலியவைதான்.

இவற்றையெல்லாம் எண்ணியே இந்த ஏளனம்பட்டியான் ஏடெடுத்து எழுதுவதிலேயே முழுக்காலத்தையும் செலவழிக்கத் தொடங்கி விட்டான். சித்தர்கள் சமசுக்கிருதத்தைச் சித்தர்களின் அருளுலக இலக்கியங்களால் உயிரூட்டியதும் தெய்வீகத் தன்மை பெறச் செய்ததும் பாம்புக்குப் பால் வார்த்தது போன்ற செயலே என்றுணர்ந்து வருந்தினர். அவர்களின் வருத்தம் பெருநெருப்பாக ஆகுமாறு பல ஆரியர்கள் '*சமசுக்கிருத மந்திரங்களால்தான் இந்துமதப் பூசைகளும் சடங்குகளும் செய்ய வேண்டும்*' **என்று கூறி இந்துமதத்தைச் செயல்நலம் குன்றச் செய்தார்கள்.** இதனால், சித்தர்கள் சாபமிட்டுச் சமசுக்கிருத மொழி பேச்சு வழக்கற்றுப் பிணமாகுமாறு செய்தனர். எனவேதான், இன்றுவரை சமசுக்கிருதம் ஆரியர்களால் கூடப் பேசமுடியாத ஒன்றாக ஆகி விட்டது. இந்தப் பிணத்தால் இந்துமதம் நலிவடைவதைத் தடுத்தேயாக வேண்டும். அதற்காகத்தான் காயந்திரி மந்தரம் அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது.

**ஒவ்வொரு மனிதனும் தனது தாய்மொழியில் தமிழில் உள்ள காயந்திரி மந்தரத்தை ஒலி நயம் கெடாமல் அன்றாடம் நூற்றெட்டுத் (108) தடவை ஓதினால், பத்தி, சத்தி, சித்தி, முத்தி.... முதலியவற்றில் படிப்படியாகத் தேர்ச்சியடைவான்**. நாடு, மொழி, இனம், காலம்.... என்ற எல்லைகளைக் கடந்து இப்பூவுலகில் வாழும் எந்த மனிதன் வேண்டுமானாலும் தமிழில் உள்ள காயந்திரி மந்தரத்தைச் சொல்லி அருளுலகச் செல்வங்களை அடையலாம் (காயந்திரி மந்தரம் ஓர் உலக மந்தரம், மத வேறுபாடு இல்லாமல் ஓதலாம்) ஏனெனில், இவ்வுலகில் உள்ள அனைத்து வழிபாட்டு நிலையங்களும், வழிபடு நிலையினரும், வழிபாட்டு வாசகங்களும்.... பதினெண் சித்தர்களால்தான் உருவாக்கப்பட்டவை.

ஞானி, தவசி, கடமைவீரர், இளைஞர், அருளாளர்.... முதலியோர்கள் ஒரு நாளைக்கு ஆறுகாலம் காயந்திரி மந்தரத்தை ஓத வேண்டும். இது காயசித்தி, மாயாசத்தி, ஓயாசத்தி, சாயாசத்தி.... எனும் நாற்பத்தெட்டு வகைச் சித்திகளையும் வழங்கும்.

தமிழில்,

***ஓம் பராசத்தி நமச்சிவாய*!***
***ஓம் நமச்சிவாய பராசத்தி!***
***ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!***
***ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!***
***ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!***
***ஓம் சிவவசி! ஓம் சிவவசி!***
***ஓம் சிவவசி! ஓம் சிவவசி!***
***ஓம் சிவவசி! ஓம் சிவவசி!***
***ஓம் உண்டங்களே! பிண்டங்களே!***
***உயிரினங்களே! பயிரினங்களே!***
***அண்டங்களே! பேரண்டங்களே!***
***அண்டபேரண்டங்களே!***
***விழிச்சி கொள்க! எழுச்சி கொள்க! செழிச்சி பெறுக!***
***யாமே அனைத்துமாக உதவுக!***
***காயந்திரி மந்தரம் கூறுகிறேன்!***
***பயனாகட்டும்! சுவையாகட்டும்!***
***முற்பிறப்பும் மறுபிறப்பும்***
***இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!***
***ஆவி ஆன்மா உயிர் மூன்றும் ஒன்றாகட்டும்!***
***அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!***
***அப்பனாக! தாத்தாவாக! இருப்பவர்களே!***
***ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!***

***(* ச் என்று அழுத்தியே உச்சரிக்க வேண்டும்.)***

உறையினின்று வாளை எடுத்து உள்ளே போடுவது போல காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் இந்த வேண்டுகோள் வாசகங்களைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாசகங்கள் பூசையின் ஆரம்பத்தில் கற்பூரம் ஏற்றியோ, புகைமூட்டியோ, யாகம் வளர்த்தோ, விண்மீன் பார்த்தோ, சூரியன் பார்த்தோ, நிலவு பார்த்தோ ஒரு முறை சொல்லப்பட்டவுடன் காயந்திரி மந்தரம் (108) நூற்றெட்டுத் தடவைகள் ஓதப்படல் வேண்டும். பூசை முடிக்கும் போது மேற்படி வாசகங்கள் ஒரு முறை சொல்லப்படல் வேண்டும். பக்குவத்துக்கேற்பக் கண்ணை மூடியோ, திறந்தோ காயந்திரி மந்தரம் ஓதலாம். ஓதும்போது இடையிடையே கண்ணைத் திறந்தும் மூடியும் ஓதலாம். அமர்ந்தோ, நின்றோ, ஒரே திசை பார்த்தோ, எட்டுத் திசையும் சுற்றியோ....... காயந்திரி மந்தரம் ஓதலாம்!

சமசுக்கிருதத்தில்

**'ஸ்ரீகாயத்ரீ மஹா மந்த்ரம்'**

***ஓம் பூர்புவஸ்ஸீவ!***
***தத்ஸ விதுர் வரேண்யம்!***
***பர்கோ தேவஸ்ய தீ மஹி!***
***தியோ யோந! ப்ரசோத யாத்!***

என்று ஆரியராலும், சமசுக்கிருதப் பற்றுடைய தமிழராலும் ஓதப்படுகிறது. இது தவறு, இது எந்தச் சத்தியையோ! சித்தியையோ! முத்தியையோ!... தரவே தராது. இது பத்திக்குப் பயன்படாது. எனவே, ஒவ்வொரு தமிழரும் உடனடியாக அன்றுடம் பதினெண்சித்தர்கள் பகர்ந்துள்ளது போல் காயந்திரி மந்தரம் முறையாக ஓதி நிறைவான அருள்நிலைகளைப் பெற வேண்டும். அதுதான், தனி மனிதர்களைக் காக்கும். தமிழைக் காக்கும், இந்துமதத்தைக் காக்கும்.

அனைத்து அருளாளர்களும், அருளுலக ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் காயந்திரி மந்தரம் ஓதி அருட்செல்வர்களாக உருவாவதுதான், இந்து மத மறுமலர்ச்சிப் பணியை வெற்றி பெறச் செய்யும். இந்துமதமே உலக மானுடரைக் காக்கும்.

***சித்தர் ஏளனம்பட்டியார்***
***முதல் இ.ம.இ. தலைவர்***
***கி.பி. 1772இல் எழுதப்பட்டது.***

------------------------

# அருளூறு காயந்திரி மந்தரம்

**(தமிழிலிருந்து சமசுக்கிருதத்தில் உருவாக்கப்பட்டது ஸ்ரீகாயத்ரீ மஹா மந்த்ரம்)**

**"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீமகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"**

இக்காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் சொல்ல வேண்டிய வேண்டுகோள் வாசகங்கள்:

**ஓம் பராசத்தி நமச்சிவாய!**
**ஓம் நமச்சிவாய பராசத்தி!**
**ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!**
**ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!**
**ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!**
**ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!**
**ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!**
**ஓம் உண்டங்களே! பிண்டங்களே!**
**உயிரினங்களே! பயிரினங்களே!**
**அண்டங்களே! பேரண்டங்களே!**
**அண்டபேரண்டங்களே!**
**விழிச்சி கொள்க! எழுச்சி கொள்க! செழுச்சி பெறுக!**
**யாமே அனைத்துமாக உதவுக!**
**காயந்திரி மந்தரம் கூறுகிறேன்.**
**பயனுகட்டும்! சுவையாகட்டும்!**
**முற்பிறப்பும் மறுபிறப்பும் இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!**
**ஆவி ஆன்மா உயிர் மூன்றும் ஒன்ருகட்டும்**
**அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!**
**அப்பனுக! தாத்தாவாக! இருப்பவர்களே**
**ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!**

ஆரியர்கள் தாங்கள் உண்டாக்கிய க்ஷத்திரியர், ஆரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணுச்சிரமப் பிரிவில் (சாதிகள்) முதல் மூவரும் மட்டுமே மேட்டுக்குடியினர், உயர்ந்தவர். எனவே, இவர்கள் மட்டும்தான் காயத்ரீ மந்த்ரம் சொல்ல வேண்டும், சூத்திரர் சொல்லக் கூடாது என்றனர்.

**குறிப்பு:** ஆரியர், சூத்திரர் என்றது இந்தியாவின் பூர்வீகக்குடிகளான தமிழர்களைத்தான்.

ஏனெனில், தமிழர்கள் எற்கனவே, காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் என்று ஐந்துவகை அருள் வாசகங்களை ஆறு வேளைத் தொழுகைகளில் பயன்படுத்தினர். காயந்திரி மந்தரம் மட்டும் காலை மாலை இரு வேளைகளிலும் சொல்லப்படலாம். மற்ற நான்கும் நான்கு வேளைகளில் சொல்லப்படல் வேண்டும். மதியம், நள்ளிரவு, முழுஇரவு, முழுப்பகல்.

மேலும், தமிழர், ஆரியர் தமிழரின் காயந்திரி மந்தரம் தான் ஆரியரால் சமசுக்கிருதத்தில் காயத்ரீ மந்த்ரம் என்று உருவாக்கப்பட்டதைக் கண்டுபிடித்திடுவர் என்பதால்தான் தமிழர்கள் இதை அறியாமல் சூழ்ச்சியாகக் காத்தனர் ஆரியர்.

2. சாதாரண மானுட வாழ்வில் கடவுளின் அருளைத் தேவையான அளவு பெற்று நிம்மதியும், நிறைவும், அமைதியும், அன்பும் உடைய வாழ்வு வாழ்ந்திடக் காயந்திரி மந்தரம்தான் பேருதவி புரியும். அன்றாடம் 108 முறை ஓதினால் போதும். எல்லா நலங்களும், விழிச்சிகளும், எழுச்சிகளும், செழுச்சிகளும் ஏற்பட்டிடும்.

3. ஆரியர்கள் தங்களின் காயத்ரீ மகாமந்த்ரத்தையே ப்றம்மோபதேசம் என்று பரப்புகிறார்கள். பூணூல் போட்டவர்கள் இதைக் கட்டாயம் பயிற்சி செய்ய வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டனர்.

குறிப்பு: குருபாரம்பரியத்தில் இறை, கடவுள், தெய்வம் எனப்படும் 48 பேர்களும் சிவன், திருமால், பிறமண் முதலிய திருக்களும், தன்வந்திரி, பரசுராமர், கலைக்கோட்டு முனி, பிருங்கி, கன்வர், விசும்பாத்திரர், வசிட்டர், பரத்துவாசர், கச்சியப்பர், காசிபர், ஆங்கிரசர், கௌதமர், அத்திரி,...... முதலிய தருக்களும் (தரு = முனிவர்) ஆறுகாலத் தொழுகைகள் செய்ததால்தான் அருட்சத்தியோடு விளங்கினர். காயந்திரி மந்தரம் குருகுலம், தவச்சாலை, வேள்விச்சாலை, பத்திச்சாலை, அருட்கோட்டம், ஞானப்பள்ளி...... மாணாக்கரால் ஆறுகாலம் அன்றாடம் ஓதப்பட்டது.

4. சூரியனை முழுமுதலாகக் கொண்டு அவனிருக்கும் திசை நோக்கித் தொழுவதுதான் காயந்திரி மந்தரம்.

**குறிப்பு:**

1. கருவறைகளில் கூறிடல்
2. வெட்டவெளித் தவத்தில் கூறிடல்
3. ஐந்தீ வேட்டலில் கூறல்
4. முத்தீ ஓம்பலில் கூறல்
5. மாயைகளை வென்றிடப் பூசையில் கூறல்
6. நீள்தவத்தில் + ஆழ் பூசையில் + குருவோடு கலப்பதில் ஆவி + ஆன்மா + உயிர் ஒன்றிடக் குகைக்குள் (அறைக்குள் = வீட்டுக்குள் மேலும் கீழும் நான்கு பக்கமும் மூடிய இடத்தில்) கூறல்

என்று ஆறு இடங்களில் கூறிடக் காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் எனும் ஐந்து படைக்கப்பட்டன. இவற்றில் எதெதை எவ்வப்பொழுது பயன்படுத்தல் என்பதனைக் குருவழிக் காண்க. குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெற்றால்தான் அனைவருக்கும் பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை, முத்திநிலை எனும் நான்கிலும் முழுமை கிடைக்கும்; நிறை வெற்றி முழுமையாகக் கிடைக்கும்.

- ***குருபாரம்பரிய வாசகம்***

5. காயந்திரி மந்தரம் சொல்லுபவர் குருவழி அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை பெற்றால் 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சிவாலயங்கள் எனப்படும் அனைத்தையுமே சித்தி செய்யலாம்

- ***குருவாக்கு, குருவாசகம், தருவாக்கு, தருவாசகம், குருபாரம்பரிய வாசகம்***

6. கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள் எனும் ஆறு பேர்கள் வழங்கியுள்ள அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை... முதலியவற்றை நன்கு பயன்படுத்தி இறை + உயிர் + தளை எனும் (பதி + பசு + பாசம்) மூன்றையும் இணைத்தல்; முற்பிறப்பு + மறுபிறப்பு + இப்பிறப்பு எனும் மூன்றையும் இணைத்தல் நிறைவேறத்தான் காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் எனும் ஐந்தும் நமசிவாய என்ற ஐந்தெழுத்தின் விளக்கமாகப் பதினெண் சித்தர்களால் படைக்கப்பட்டன.

இவை ஐந்துவகை; பூசைக்காலங்கள் ஆறு; ஆனால், காலை + மாலை ஒரே வேளையாகக் கருதப்படல் மரபு என்பதால் பூசை வேளை ஐந்துதான். ஐந்தெழுத்து = பஞ்சாட்சரம் = நமசிவாய = ஐந்துவகையான காயந்திரி மந்திரங்கள்* (* அருள்வாசகம்)

**குறிப்பு:** காயந்திரி மந்திரங்கள் தமிழர்களுடையவைதான். தமிழில்தான் முதன் முதல் பதினெண் சித்தர்களால் படைக்கப்பட்டன.

***நமசிவாய*** என்ற ஐந்தெழுத்தின் விளக்கமே ஐந்து வகையான காயந்திரி மந்திரங்கள்.

7. தமிழர்கள் எல்லாரும் அன்றாடம் காயந்திரி மந்தரம் 108 தடவை சொல்லியேயாக வேண்டும். இதுதான் தமிழர்களை மொழிப்பற்றும், இன ஒற்றுமையும், நாட்டுரிமையும், பண்பாட்டுப் பிடிப்பும் உள்ளவர்களாக ஆக்கிடும். தமிழர்க்கு அகவொளியும், முகவொளியும் ஏற்பட்டால்தான் இகவொளி கிடைக்கும். அதன்பிறகே அமுதத் தமிழால் தன்னுரிமை மிகு அருளாட்சி அமைக்க முடியும்.

8. கருவைப் புரியக் காயந்திரி மந்திரங்கள் தேவை. அதன் பிறகே, குருவைப் புரிய முடியும். குருவே திரு; திருவே தரு; தருவே கரு; கருவே குரு;... என்பன தமிழர்களுக்கு முழுமையாக விளக்கமானால்தான் குருவழி வாழ்ந்து விடுதலை பெறுவர். தமிழினம் மெய்ஞ்ஞானக் குருவைத் தெரிந்து, விரும்பி, ஏற்றுச் செயல்பட்டால்தான் எல்லா ஞானங்களையும் பெற்று உரிமைமிகு பெருமை வாழ்வு பெற்றிடும். குருவழி நின்று ஒழுகக் கற்றால்தான் தமிழினம் களப்பிறர், பல்லவர், சோனகர், யவனர், ஆரியர் ... முதலியோரிடம் அடிமைப்பட்டு மிடிமையுற்று, இழிந்து, சிதைந்து, சீரழிந்து, தலைகுனிந்து, சிந்தை வெந்து, நெஞ்சம் நைந்து ... வாழும் வாழ்வை மாற்றிட ஒன்று திரள முடியும். சூரிய குலத்தின் தலைமையில் அருளாட்சியை அமைக்க முடியும். இந்து மதத்தால்தான் தனிமனித மாணிக்கங்களை மாலையாக்க முடியும். ஒவ்வொருவரும் இந்து மதத்தை உணரவும், பயன்படுத்திப் பயனடையவும் அன்றாடம் காயந்திரி மந்தரம் 108 முறை ஓத வேண்டும்.

***குருபாரம்பரிய வாசகம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அருளியது.***

சோழப்பேரரசு அருளாட்சி நடத்த உருவாவதற்கு இவ்வாசகங்களே பேருதவி புரிந்து தமிழர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்திப் பெரும் வீரம் காட்டிப் போரிடச் செய்தன.

***- கருவூர்த்தேவர்***

9. பரம்பரையாகக் காயந்திரி மந்தரம் சொல்ல வேண்டும். அது ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வீழ்ச்சியோடு மதுரை எரிந்ததோடு, மதுரைத் தமிழ்ச்சங்கங்கள் இடிக்கப்பட்டும், ஏடுகள் எரிக்கப்பட்டும், தமிழ்ப் புலவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டும் பேரழிவு தமிழினத்துக்கு ஏற்பட்டதோடு தடைப்பட்டு விட்டது. எனவேதான், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் பெரிய அருட்கொடை வள்ளலாக வாழ்ந்து ஆர்வம் உள்ளவர்களையெல்லாம் இட்டும், தொட்டும், சுட்டியும் அருளாளர்களாக மாற்றினார். ஐந்து வகையான காயந்திரி மந்திரங்களையும் வழங்கினார். குருவழி வாரிசுகளையும், விந்துவழி வாரிசுகளையும் உருவாக்கினார். ஆரத்தழுவி ஆர்வலர்களையும், விருப்பாளர்களையும், ஆதரவாளர்களையும் படிப்படியாக அருளாளர்களாக்கினார். அதனால், அடியான்களும், அடியார்களும், அடியாள்களும் அருட்படை நடத்தும் நாயகர்களாக, தளபதிகளாகச் செயல்பட்டுச் சோழப்பேரரசை உருவாக்கி அருளாட்சியைத் துவக்கினர். பழியோ, இழிவோ, அழிவோ, தாழ்ச்சியோ, இகழ்ச்சியோ,... அருட்சேனை திரட்டும் பணியில் ஈடுபட்டால் அது பெரு நெருப்பில் ஈரவிறகும் எரிவது போல் போரிலும், போரின் வெற்றியாலும் மறைந்திடும். பீடாதிபதியால்தான் வாழையடி வாழையாக அருளாளர்கள் இந்த வையகத்துக்குக் கிடைக்கிறார்கள்.

ஐந்து வகை நிலத்தவரும் பயனடைய ஐந்து வகைக் காயந்திரி மந்திரங்கள் ஐந்து எழுத்தான நமசிவாயத்தின் விளக்கமாகப் பிறந்தன.

***- கருவூர்த் தேவர்.***

-----------------------------

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு முதல் இந்த அறிக்கையைப் படிப்பவர்கள் அனைவரும் காயந்திரிப் பூசைமொழிகளை ஓதும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதற்கு வசதியாகவே இந்த வெளியீட்டில் அனைவரும் அன்றாடம் பயன்படுத்துதற்குரிய காயந்திரி மந்தரம் வெளியிடப் பட்டுள்ளது. இதை முதன் முதலில் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் எப்படி வெளியிட்டாரோ அப்படியே ஓர் எழுத்துக் கூட மாற்றப்படாமல் அச்சிடப்பட்டுள்ளது. அனைவரும் அன்றாடம் குறைந்தது 8 முறையிலிருந்து 108 முறை வரை ஓதிடப் பழகிக் கொள்ளலாம். இந்த மந்தரம் ஓதும் பழக்கம் ஒருவரின் பரம்பரைக்கும் நற்பயன்களை விளைவித்துத் தரும். அருளைச் சேர்த்து வைத்தால் தமிழ் கூறும் நல்லுலகம் சிறக்கும். தமிழர் சிறந்தாலே உலகம் முழுமையும் இன்று உள்ள அநீதிகளும், ஏமாற்றுக்களும், சுரண்டல்களும், வெறிகளும், … அகன்றுவிடும்.

**“குருவாசகமும் திருவாசகமும் மனிதனின் கண்கள்”**

**“மதமே மானுடப் பண்பாட்டுக்கும் நாகரிகத்துக்கும் காப்பகம், கருவூலம்”**

**“மதவழிப்பட்ட உணர்வும், செயலுமே உலகியலில் தெளிவும், தெம்பும், நிறைவும் உண்மையாகப் பெறச் செய்யும்”**

**“ஆவி, ஆன்மா, உயிர் எனும் மூன்றின் முழுமையான செயல்விளக்கமே சித்தர் நெறி”**

**ஓர் அறிவிப்பு**



**இந்த சுற்றறிக்கையைப் பெறுபவர்கள் மற்றவர்களுக்கு இதைப் படிக்கக் கொடுக்கலாம். இதைப் படித்த மற்றவர்கள் இந்த அறிக்கையைப் பெற விரும்பினால் அவர்களின் முகவரியை எங்களிடம் பதிவு செய்து கொள்ளலாம். எங்களது முகவரியும் தொலைபேசித் தொடர்பு எண்ணும் இதே பக்கத்தில் கீழே உள்ளன. மின்னஞ்சல் முகவரி:** *indhuism@gmail.com*

**அன்னிய நாகரிகத்தின் தாக்குதலாலும், பொய்யான ஹிந்துமதத்தின் ஆதிக்கத்தாலும் … பிற காரணங்களாலும் இந்த அறிக்கையை மேலும் பெற விரும்பாவிட்டால் அதையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.**

***- சித்தரடியான்கள் குழுமம்***

## BOOK-POST

To

**If Undelivered please return to**

Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No.34, Door No.345
Outer Ring Road, Bellandur Post
Bangalore East - 560103
Cell: 09972130609